DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC 361/2019

Prosecution witness – PW 3

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி.மல்லிகா | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(A1 to A7 absent. Petition U/s 317 Cr.P.C filed and allowed)

27.05.2025–

<u>முதல் விசாரணை</u>:–

1. எனக்கு சொந்த ஊர் கீரந்தை கிராமம், நான் தற்போது ராமேஸ்வரத்தில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 எனது பெற்றோர்கள். எதிரிகளை தெரியும்.

2. எங்கள் குடும்பத்தார்க்கும் எதிரிகளுக்கும் எங்கள் வீட்டிற்கு முன்பாக உள்ள பொதுப்பாதை சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது.

3. கடந்த 05.08.2018 ந் தேதி காலை சுமார் 07.00 மணியளவில் ராமசாமி, ராமர், லெட்சுமணன் ஆகியோர் கத்தி, கம்புகளுடன் வந்தார்கள். ராஜேஸ்வரி, ராஜகனி, லட்சுமி, சவுந்தரம் ஆகியோர் கையில் செங்கல் கொண்டு வந்தார்கள். ராஜேஸ்வரிக்கு ஆதரவாக ராமசாமி என்பவர் பொது பாதையை முள்வேலி கொண்டு அடைத்து எனது அம்மாவை அசிங்கமாக பேசினார்.

4. நீ யாரடி தேவிடியா என்று ராமசாமி என்பவர் எனது அம்மாவை அசிங்கமாக பேசி கத்தி, கம்பால் வலது நெற்றியில் வெட்டினார். எனது அம்மாவிற்கு ரத்தக்காயம் ஏற்பட்டது. ராமர் என்பவர் எனது அம்மாவை பார்த்து ஓடுவிடு என்று சொல்லி கத்தி, கம்பை பிடித்து இடது புற நெற்றியில் அடித்து காயப்படுத்தினார்.

5. அருகிலிருந்த எனது அப்பாவை லெட்சுமணன் என்பவர் கம்பால் வலது கணுக்காலில் அடித்தார். எனது அப்பாவிற்கு காலில் காயம்பட்டது. பின்னர் எனது அப்பாவை அசிங்கமாக பேசி நீ எதுக்குடா தேவிடியா பயலே வந்தாய் என்று பேசினார். பெண்கள் 4 பேரும் கல்லால் எறிந்தார்கள். அதில் எனது அம்மாவிற்கு

முதுகு, வலது தொடை, இடது கால், ஆகிய இடங்களில் காயம்பட்டது. நானும், பக்கத்து வீட்டைச் சேர்ந்த வில்வக்கனி, களஞ்சியம், ஆகியோர் எதிரிகளை சத்தம் போட்டோம்.

6. அதற்கு எதிரிகள் அனைவரும் போலீஸில் சொன்னால் உங்களை வெட்டி கொன்றுவிடுவோம் என்று மிரட்டி விட்டு ஓடிவிட்டார்கள். காயம்பட்ட எனது அம்மாவையும், அப்பாவையும் கீழக்கரை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தேன். சம்பவத்தன்று போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>

1. வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் அன்றைய தினம் மாலை 05.00 மணிக்கு விசாரித்தார்கள். என்னை விசாரித்தவர் சார்பு ஆய்வாளரா, ஆய்வாளரா என்றால் எனக்கு தெரியாது. எனக்கு திருமணம் ஆனது ராமேஸ்வரம். நான் சம்பவ தினத்திற்கு எதற்காக பி.கீரந்தை ஊருக்கு வந்திருந்தேன் என்றால் விடுமுறை என்பதால் எனது அம்மா வீட்டிற்கு வந்திருந்தேன்.

2. சம்பவத்திற்கு முன்பு எவ்வளவு நாட்களுக்கு முன்பு எனது கணவர் வெளிநாடு சென்றிருந்தார் என்றால் எனக்கு தேதி ஞாபகமில்லை. 7 வது மாத இறுதியில் சென்றார். எனது கணவர் வெளிநாடு சென்ற சமயம் நான் கீரந்தையில் இருந்தேன் என்றால் அவர் சென்ற பின்னர் தான் நான் கீரந்தை வந்தேன்.

3. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், என்னுடைய குடும்ப பிரச்சனை காரணமாக நான் எனது கணவரை பிரிந்து எனது தாயார் வீட்டில் இருந்தேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ சமயத்திலிருந்து தற்போது எனது தாயார் வீட்டில் தான் இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் ராமேஸ்வரத்தில் குடியிருந்து வருகிறேன். ராமேஸ்வரத்தில் துாரியை சேர்ந்த முனியசாமி என்பவர் ஒரு முக்கிய பிரமுகர் இருந்து வருகிறார் என்றால் சரிதான்.

4. அவர் முன்னிலையில் எங்கள் குடும்ப பிரச்சனை பேசி முடிக்கப்பட்டது என்றால் சரிதான். எனது அப்பா எனது கணவர் மீது கொடுத்த புகார் சம்மந்தமாக வழக்கு தற்போது வரை நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் தான் எனது அப்பாவிற்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அந்த காயத்தை

பயன்படுத்தி பொய்யாக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

5. சம்பவ இடத்தில் உள்ள சாலை வடக்குத்தெற்காக செல்கிறது என்றால் சரிதான். அந்த பாதை நாகநாதன் வீட்டுடன் முடிந்துவிடும் என்றால் அது பொதுப்பாதை. எனது தகப்பனார் வீடு வயல்வெளியில் அமைந்துள்ளது என்றால் வீட்டு மனையில் தான் அமைந்துள்ளது. அது நஞ்சையா, புஞ்சையா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தகப்பனார் வீடு ஊரின் மேற்கு கடைசியில் அமைந்துள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கின் எதிரிகளான நாகநாதன் ராஜேஸ்வரி ஆகியோரின் வீடு ஊரின் மத்திய பகுதியில் உள்ளது என்றால் சரிதான்.

6. எனது அம்மாவிற்கு வலது நெற்றியில் இயற்கையாகவே ஒரு கட்டி உள்ளது என்றும் அதற்காக எனது அம்மா சிகிச்சை பெற்று வந்தார் என்றால் சரியல்ல. அந்த காயத்தை பொய்யாக பயன்படுத்தி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எங்கள் ஊரிலிருந்து கீழக்கரை மருத்துவமனைக்கு செல்லும் வழியில் தான் சிக்கல் காவல்நிலையம் உள்ளது என்றால் சரிதான்.

7. நான் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் இந்த வழக்கில்கண்ட எதிரிகள் எந்த அசம்பாவிதம் செய்யவில்லை என்றாலும், பொதுப்பாதைக்கு போலீசார் மூலம் தீர்வு காண வேண்டி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது அம்மா சுகர் மற்றும் பிரஸ்ஸர் காக மருந்துகள் சாப்பிடுவார்கள் என்றால சரியல்ல. எனது அம்மா கீழே விழுந்ததால் ஏற்பட்ட சிராய்ப்பு காயத்தை பயன்படுத்தி வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி